சிற்றிலக்கியம் மரபு சார்ந்த விளக்கங்கள்

Traditional Perspectives and Conventions of Tamil Minor Literary Genres (Sitrilakkiyam)

முனைவர் மு.இரவி
உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்
சிதம்பரம், தமிழ்நாடு, இந்தியா

Dr. M. Ravi
Assistant Professor, Department of Tamil
Annamalai University, Chidabaram
Tamil Nadu, India

Citation: Ravi, M. "Traditional Perspective and Conventions of Tamil Minor Literary Genres (Sitrilakkiyam)." *Journal of Tamil Culture and Literature*, vol. 6, no. 2, 2026, pp. 1-7.

https://doi.org/10.5281/zenodo.23949299

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கிய மரபில் சிற்றிலக்கியங்கள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. அளவில் சிறியனவாக இருப்பினும், பாடுபொருள், வடிவம், யாப்பு, உத்தி, மொழிநயம், பண்பாட்டு வெளிப்பாடு ஆகியவற்றில் சிற்றிலக்கியங்கள் பன்முகத்தன்மையைக் கொண்டுள்ளன. இவ்வாய்வுக் கட்டுரை சிற்றிலக்கியங்களின் வரலாற்றுப் பின்னணி, தோற்றம், வளர்ச்சி, தனிச்சிறப்புகள், மரபுசார் இலக்கண விதிகள் மற்றும் படைப்பாக்க நெறிகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பெருங்காப்பியங்களில் உறுப்புகளாக இடம்பெற்றிருந்த பல்வேறு இலக்கியக் கூறுகள் காலப்போக்கில் கோவை, உலா, தூது, கலம்பகம், பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, அந்தாதி, பரணி, ஊசல் போன்ற தனித்த இலக்கிய வகைகளாக வளர்ச்சியடைந்த விதம் விளக்கப்படுகிறது. குறிப்பாக, நாயக்கர் காலத்தில் நிலவிய அரசியல், சமூக, சமய மற்றும் பண்பாட்டு மாற்றங்கள் சிற்றிலக்கியங்களின் வளர்ச்சியில் ஏற்படுத்திய தாக்கங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. சிற்றிலக்கியங்களின் பாடுபொருள், அமைப்பு, யாப்பு, பாட்டுடைத் தலைவர் மற்றும் பாடல் எண்ணிக்கை போன்றவற்றை வரையறுப்பதில் பாட்டியல் நூல்கள் வகித்த பங்கு ஆராயப்படுகிறது. கலிங்கத்துப்பரணி, வெண்பா பாட்டியல் போன்ற நூல்களின் சான்றுகள் வாயிலாகப் போர்வீரம், அரசர்களின் சிறப்புகள், சமூக வாழ்வியல் மற்றும் இலக்கிய மரபுகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. மேலும், தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் வனப்புகளுக்கும் பிற்காலச் சிற்றிலக்கியங்களின் வடிவியல் மற்றும் அழகியல் கூறுகளுக்கும் இடையிலான தொடர்பு விளக்கப்படுகிறது. சிற்றிலக்கியங்கள் தமிழரின் பண்பாட்டு மரபைப் பாதுகாப்பதோடு, காலந்தோறும் ஏற்பட்ட சமூக மாற்றங்களையும் மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும் பிரதிபலிக்கும் வளமான இலக்கிய வடிவங்களாகத் திகழ்கின்றன என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

திறவுச்சொற்கள்: *சிற்றிலக்கியம், பிரபந்தம், தமிழ் இலக்கிய மரபு, பாட்டியல், தொல்காப்பியம், நாயக்கர் காலம், இலக்கிய மரபுகள், சிற்றிலக்கிய வளர்ச்சி.*

Abstract

Tamil minor literary genres, commonly known as Sitrilakkiyam or Prabandham, constitute a significant and distinctive tradition in Tamil literature. Although relatively brief in length, these literary forms exhibit considerable diversity in themes, poetic structures, literary techniques, aesthetic qualities, and cultural expressions. This article examines the historical development, distinctive characteristics, literary

conventions, and grammatical principles of Tamil minor literary genres. It explores how literary elements originally embedded within major epics gradually evolved into independent literary forms, including Kovai, Ula, Thoothu, Kalambakam, Pillaitamil, Kuravanji, Anthathi, Parani, and Oosal. Particular attention is given to the political, social, religious, and cultural transformations that contributed to the growth of these genres, especially during the Nayak period. The study highlights the role of traditional grammatical treatises, particularly Pattiyal texts, in defining the structures, themes, poetic metres, and conventions governing minor literary compositions. Through references to Kalingathuparani and Venba Pattiyal, the article illustrates the literary representation of warfare, royal achievements, social experiences, and established poetic traditions. Furthermore, it investigates the relationship between Tamil minor literary genres and the ancient grammatical principles of Tolkappiyam, emphasizing the continuity of literary aesthetics and structural conventions. The article concludes that Tamil minor literary genres represent a rich literary tradition that preserves cultural heritage, reflects changing social realities, and demonstrates the adaptability and creative diversity of Tamil literary expression.

***Keywords**: Votive Offerings, Temple Architecture, and The Sacred History (Sthala Varalaru) of Valaithottam Ayyan Temple.*

முன்னுரை

தமிழ் இலக்கியப் பரப்பில் பெருங்காப்பியங்கள், காப்பியங்கள், சங்க இலக்கியங்கள் போன்ற பேரிலக்கிய வகைகளுக்கு இணையாக, தனித்துவமான பாடுபொருள், வடிவம், யாப்பு, உத்தி, மரபு ஆகியவற்றைக் கொண்டு வளர்ச்சி பெற்ற இலக்கிய வகையாகச் சிற்றிலக்கியம் விளங்குகிறது. ''சிறிய இலக்கியங்கள்'' என்ற பொருளில் வழங்கப்படும் சிற்றிலக்கியங்கள், அளவில் சிறியனவாக இருப்பினும் கருத்து வளத்திலும், கற்பனை நயத்திலும், மொழியழகிலும் சிறப்புடையனவாக அமைந்துள்ளன.

தமிழில் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகையுடையன என்று பொதுவாகக் குறிப்பிடப்படுகிறது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருட்களில் ஏதேனும் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு அமைந்த இலக்கிய வகைகளுள் சிற்றிலக்கியங்களும் அடங்குகின்றன. சிற்றிலக்கியங்கள் ''பிரபந்தங்கள்'' என்றும் அழைக்கப்படுகின்றன. ''பிரபந்தம்'' என்னும் வடசொல்லுக்கு ''நன்கு கட்டப்பட்டது'' என்பது பொருளாகும். பெருங்காப்பியங்களின் உறுப்புகளாக அமைந்திருந்த தூது, குறம் முதலான பல்வேறு இலக்கியக் கூறுகள் பிற்காலத்தில் தனித்தனி இலக்கிய வகைகளாக வளர்ச்சி பெற்றன/ அவ்வாறு தனித்துவமான வடிவங்களையும் பாடுபொருள்களையும் பெற்ற இலக்கியங்கள் பின்னாளில் ''சிற்றிலக்கியங்கள்'' என்ற பெயரில் வழங்கப்பட்டன.

சிற்றிலக்கிய அறிமுகம்

சிற்றிலக்கியம் என்பது அளவில் சிறியதாக அமைந்த இலக்கியம் மட்டுமல்ல; குறிப்பிட்ட பாடுபொருளையும், தனித்துவமான வடிவத்தையும், மரபுசார் இலக்கணத்தையும் கொண்ட இலக்கிய வகையாகும். பெருங்காப்பியங்களில் இடம்பெற்றிருந்த பல்வேறு உறுப்புகள் தனித்த இலக்கிய வடிவங்களாகப் பிரிந்து வளர்ந்ததன் விளைவாகச் சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கையும் வகைமையும் பெருகின. கோவை, உலா, தூது, கலம்பகம், பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, அந்தாதி, பரணி, ஊசல் போன்ற பல்வேறு இலக்கிய வகைகள் சிற்றிலக்கிய மரபின் வளத்தையும் பன்முகத்தன்மையையும் வெளிப்படுத்துகின்றன. இவ்வகை இலக்கியங்களில் மன்னர்கள், தெய்வங்கள், தலைவர்கள் மட்டுமல்லாமல், சாதாரண மக்களும் பாட்டுடைத் தலைவர்களாக இடம்பெறும் வாய்ப்பைப் பெற்றனர். இதன் வழியாகச் சிற்றிலக்கியம் சமூகத்தின்

பல்வேறு நிலைகளையும், மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும் இலக்கியப் பொருளாக ஏற்றுக்கொண்டது.

சிற்றிலக்கிய வரலாற்றுப் பின்னணி

தமிழக வரலாற்றில் கி.பி. 1310 முதல் கி.பி. 1750 வரையிலான காலம் இரண்டாம் வேற்றரசுக் காலம் எனப்படுகிறது. இக்காலகட்டத்தில் தமிழகத்தின் அரசியல், சமயம், கலை, பண்பாடு, மொழி, இலக்கியம் ஆகிய பல்வேறு துறைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. தமிழரல்லாத பிறமொழியாளர்களின் ஆட்சி நிலவிய சூழல் தமிழகத்தின் பண்பாட்டு இயக்கங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது2 பெரிய காப்பியங்களைப் படைப்பதற்கான சாதகமான சூழல் குறைந்த இக்காலத்தில், சிற்றிலக்கியங்கள் பெருமளவில் தோன்றி வளர்ந்தன. இதனால் மொழியின் இலக்கிய வளம் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டது. குறிப்பாக நாயக்கர் காலச் சூழலில் பல்வேறு சிற்றிலக்கிய வகைகள் செழித்து வளர்ந்தன. அருணகிரிநாதர், ஔவையார், காளமேகப்புலவர், கடவுண்மாமுன், குமரகுருபரர், சிவப்பிரகாச சுவாமிகள் போன்றோர் சிற்றிலக்கியப் படைப்புகளால் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளனர்.

சிற்றிலக்கியப் புலவர்களின் தனித்துவத்தை,

வெண்பாவிற்குப் புகழேந்தி; பரணிக்கோர் சயங்கொண்டான்
விருத்தமென்னும் ஒண்பாவிற் குயர்கம்பன்;
கோவை உலா அந்தாதிக் கொட்டக் கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்;
வரைபாடக் காளமேகம்; பண்பாக
உயர்சந்தம் படிக்கா உலாதொருவர் பகரொ ராதே[3]

என்ற பாடல் வரிகள் புலவர்களின் தனித்திறன்களையும், குறிப்பிட்ட இலக்கிய வகைகளில் அவர்களுக்கிருந்த ஆளுமையையும் எடுத்துக்காட்டுகின்றன. இதன் மூலம் குறிப்பிட்ட இலக்கிய வடிவங்களில் புலவர்கள் பெற்றிருந்த சிறப்புத் திறனும், அத்துறைகளில் அவர்களது பங்களிப்பும் வெளிப்படுகின்றன. எனவே, சிற்றிலக்கிய வளர்ச்சி என்பது தனிப்பட்ட படைப்புகளின் தோற்றமாக மட்டுமன்றி, குறிப்பிட்ட இலக்கிய வடிவங்களைச் சார்ந்த புலமை மரபின் வளர்ச்சியாகவும் கருதத்தக்கது.

சிற்றிலக்கியத்தின் சிறப்பியல்புகள்

சிற்றிலக்கியங்களின் முதன்மையான சிறப்பியல்புகளுள் ஒன்று அவற்றின் வடிவப் பன்மையாகும். ஒவ்வொரு சிற்றிலக்கிய வகையும் தனித்த பாடுபொருள், யாப்பு, உத்தி, அமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டில் சிற்றிலக்கியத் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் பல்வேறு புதிய போக்குகள் தென்படத் தொடங்கின. காலத்தை நேரடியாகப் பதிவு செய்யும் வரலாற்று ஆவணங்களாக அவை அமையாவிட்டாலும், அவற்றின் பாடுபொருள்கள் வழியாக அக்கால அரசியல், சமூக, பண்பாட்டு நிலைகளை அறிந்துகொள்ள முடிகிறது. குறிப்பாகப் பரணி இலக்கியத்தில் மன்னர்களின் வீரமும் போர்த்திறனும் விரிவாகப் பதிவு செய்யப்படுகின்றன. கலிங்கத்துப்பரணியில் சோழ மன்னனின் படைவீரர்களின் போர்த்திறனை எடுத்துக்காட்டும் வகையில்,

இட்ட வட்டணங்கள் மேல்
எறிந்த வேல் திறந்த வாய்

வட்டம் இட்ட நீள மதிற்கு
வைத்த பூழை ஒக்குமே

என்னும் பாடல் இடம்பெறுகிறது. இப்பாடல் வரிகள் போர்க்களத்தில் எதிரிகளின் கேடகங்களை வீரர்கள் வேலால் தாக்கித் துளைத்ததையும், மதில்சுவரைப் போன்று அணிவகுத்து நின்று எதிரிகளின் தாக்குதலைத் தடுத்ததையும் காட்சிப்படுத்துகின்றன. இதன் மூலம் பரணி இலக்கியத்தில் வீரத்தையும் போர்க்களக் காட்சிகளையும் வருணிக்கும் திறன் வெளிப்படுகிறது. அதேபோன்று கருணாகரத் தொண்டைமான் தலைமையில் சோழப் படை கலிங்கத்தை வென்ற நிகழ்வும், போரில் கைப்பற்றப்பட்ட பொருள்களின் பெருமையும் கலிங்கத்துப்பரணியில் விரிவாகச் சித்திரிக்கப்படுகின்றன:

நடை வயப்பரி, இரதம், ஒட்டகம்
நவநிதிக் குவை, மகளிர் என்று
அடைய அப்பொழுது அவர்கள் கைக்கொள்ளும்
அவை கணிப்பதும் அருமையே!

என்ற பாடல் வரிகள் எண்ணிக்கையிட இயலாத அளவிற்கு குதிரைகள், தேர்கள், ஒட்டகங்கள், நவநிதிக் குவியல்கள் போன்ற பல்வேறு பொருள்கள் கைப்பற்றப்பட்ட போர்வெற்றியின் பெருமையை எடுத்துரைக்கின்றன. இதனால் சிற்றிலக்கியங்கள் கற்பனைப் படைப்புகளாக மட்டுமன்றி, குறிப்பிட்ட காலத்தின் அரசியல், போர், ஆட்சி, சமூக வாழ்வு போன்ற பல்வேறு கூறுகளையும் பதிவுசெய்யும் இலக்கிய ஆவணங்களாகவும் விளங்குகின்றன.

சிற்றிலக்கியக் கொள்கைகள்

இலக்கியங்கள் காலந்தோறும் புதிய பாடுபொருள்களையும் உத்திமுறைகளையும் ஏற்றுக்கொண்டு வளர்ந்து வந்துள்ளன. அவ்வகையில் சிற்றிலக்கியங்கள் பாடுபொருளிலும் படைப்பாக்க உத்தியிலும் பல புதிய கூறுகளை அறிமுகப்படுத்தின. பேரிலக்கியங்களில் காணப்படும் தன்னிகரில்லாத தலைவன், விரிவான கதை அமைப்பு, நீண்ட வருணனைகள் போன்ற கூறுகளிலிருந்து விலகி, வாழ்க்கையின் குறிப்பிட்ட நிகழ்வு, உணர்வு அல்லது காட்சியை மையப்படுத்தும் தன்மை சிற்றிலக்கியங்களில் காணப்படுகிறது. முக்கியமாகச் சிற்றிலக்கியங்களில் சாதாரண மக்களும் பாட்டுடைத் தலைவர்களாக இடம்பெறும் வாய்ப்பைப் பெற்றனர். இதன் மூலம் இலக்கியத்தின் பாடுபொருள் எல்லை விரிவடைந்தது. மன்னர்கள், தெய்வங்கள், அரசர்கள் போன்ற உயர்நிலைப் பாத்திரங்களோடு மக்களின் அன்றாட வாழ்க்கை, தொழில், காதல், வழிபாடு, பண்பாடு, சமூக உறவுகள் போன்றவையும் இலக்கியப் பொருள்களாக அமைந்தன.

இலக்கிய வரையறையின் இத்தகைய தளர்வு காரணமாகச் சிற்றிலக்கியங்கள் அடித்தட்டு மக்களையும் எளிமையாகச் சென்றடையும் தன்மையைப் பெற்றன. இதன் மூலம் இலக்கியம் என்பது குறிப்பிட்ட சமூகத்தினருக்குரியதாக மட்டும் இல்லாமல், பரந்த மக்களுக்குரிய வெளிப்பாடாக மாறியது.

சிற்றிலக்கியத்திற்கான மரபும் விதியும்

சிற்றிலக்கியங்களுக்குரிய இலக்கண மரபுகளை விளக்குவதில் பாட்டியல் நூல்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இந்நூல்கள் சிற்றிலக்கியங்களின் தோற்றம், அமைப்பு, பாடுபொருள், யாப்பு, பாட்டுடைத் தலைவர், பாடல் எண்ணிக்கை போன்ற பல்வேறு கூறுகளுக்கான விதிகளை எடுத்துரைக்கின்றன. பாட்டியல் நூல்களுள் வச்சணந்திமாலை குறிப்பிடத்தக்கதாகும். அதேபோன்று வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதியில் பிரபந்தம் தொண்ணூற்றாறு எனக்

குறிப்பிடப்பட்டு, அவற்றின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. எனினும் பொதுவாகக் குறிப்பிடப்படும் சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கையோடு பாட்டியல் நூல்கள் குறிப்பிடும் வகைப்பாடுகளில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கோவை, உலா, தூது, கலம்பகம், பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, அந்தாதி ஆகியவை சிற்றிலக்கிய மரபில் முக்கியமான வகைகளாகத் திகழ்கின்றன. ஒவ்வொரு வகையும் தனக்கென ஒரு மரபையும் விதிமுறையையும் கொண்டுள்ளது.

மன்னர்களைப் பற்றிய உலாப் பாடல்களில் பழமையான பாரம்பரியம், முன்னோர் மரபு, வழித்தோன்றல்கள் பற்றிய செய்திகள் ஆகியவை சிறப்பிடம் பெறுகின்றன. அவற்றோடு மன்னரின் ஆட்சிச் சிறப்பு, நாட்டுவளம், படைவலிமை, இரவலர்களை ஆதரிக்கும் பண்பு போன்றவையும் இடம்பெறுகின்றன. இதன் மூலம் உலா இலக்கியங்கள் அரசனின் தனிப்பட்ட சிறப்பை மட்டுமன்றி, அவன் ஆட்சி செய்த நாட்டின் வளத்தையும் அரசியல் வலிமையையும் பதிவு செய்யும் தன்மையுடையனவாகின்றன. அதேபோன்று ஊசல் என்னும் சிற்றிலக்கிய வகையிலும் தனித்த மரபு காணப்படுகிறது. இதனை,

ஆங்கவிருத் தத்தா லறைந்தகலித் தாழிசையால்
ஓங்கியசுற் றத்தாளவா யூசலாம்'

என்னும் வெண்பா பாட்டியல் பாடல் விளக்குகிறது. ஊசல் இலக்கியங்களில் தெய்வங்கள் அல்லது மக்களால் சிறந்தவர்களாகப் போற்றப்படும் மனிதர்கள் பாட்டுடைத் தலைவர்களாக இடம்பெறுகின்றனர். பெரும்பாலான ஊசல் பாடல்கள் பத்து என்ற எண்ணிக்கையில் பாடல்களைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் சிற்றிலக்கியங்கள் கட்டுப்பாடற்ற இலக்கிய வடிவங்கள் அல்ல என்பதும், அவற்றிற்கென மரபுவழியாக உருவான இலக்கண விதிகளும் படைப்பாக்க நெறிகளும் இருந்துள்ளன என்பதும் தெளிவாகிறது.

சிற்றிலக்கியத் தோற்ற மரபு

சிற்றிலக்கியங்களின் தோற்றத்தை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மட்டுப்படுத்திப் பார்ப்பது பொருத்தமானதல்ல. தொல்காப்பியக் காலத்திலிருந்தே சிறிய அளவிலான இலக்கிய வடிவங்களுக்கான அடிப்படை மரபுகள் இருந்துள்ளன. காலத்தின் மாற்றத்திற்கேற்ப அவை தனித்த இலக்கிய வகைகளாக வளர்ச்சி பெற்றன.

பத்துப்பாட்டு நூல்களுக்குப் பின்னரும், பரிசில் பெற்று வாழ்ந்த புலவர்கள் பாட்டுடைத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பற்றிப் பாடும் மரபு தொடர்ந்தது. இதன் அடிப்படையில் புதிய இலக்கிய வடிவங்கள் உருவாக்கப்பட்டன. நீதி நூல்கள் தோன்றிய காலத்திலிருந்தே சி றிய இலக்கியங்களை உருவாக்கும் மரபு காணப்பட்டாலும், சிறிய அளவிலான தனித்த இலக்கிய வகைகளைத் திட்டமிட்டு உருவாக்கிய காலமாகக் கி.பி. 15 முதல் 18ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சுட்டிக்காட்டலாம்.

இக்காலம் நாயக்கர் காலம் என்றும் அழைக்கப்படுகிறது. வேற்றுமொழி பேசும் ஆட்சியாளர்களின் வருகை, தமிழக அரசியல் அமைப்புகளில் ஏற்பட்ட மாற்றங்கள், உள்நாட்டு மோதல்கள், அரசியல் நிலைமாற்றங்கள் ஆகியவை இலக்கியச் சூழலிலும் தாக்கத்தை ஏற்படுத்தின. இத்தகைய சூழலில் நீண்ட காப்பியங்களைப் படைப்பதற்கான வாய்ப்புகள் குறைந்த நிலையில், புலவர்கள் குறிப்பிட்ட பாடுபொருள்களை மையமாகக் கொண்டு சிறிய அளவிலான இலக்கியங்களைப் படைத்தனர். மேலும், புலவர்களின் வாழ்வாதாரத் தேவைகளும் அவர்களின் படைப்பாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அரசர்கள், குறுநில மன்னர்கள், செல்வர்கள், சமயத் தலைவர்கள் ஆகியோரைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு படைப்புகளை

உருவாக்கியதன் மூலம் புலவர்கள் தங்களது இலக்கியப் புலமையையும் வாழ்வியல் தேவைகளையும் ஒருங்கிணைத்தனர். இவ்வாறு சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு சூழல்களின் கூட்டு விளைவாகச் சிற்றிலக்கியங்கள் தனித்த இலக்கிய மரபாக வளர்ச்சி பெற்றன.

தொல்காப்பிய மரபும் சிற்றிலக்கியமும்

சிற்றிலக்கியங்களின் தோற்றத்தைப் பிற்கால இலக்கிய வளர்ச்சியோடு மட்டும் தொடர்புபடுத்தாமல், தொன்மையான தமிழ் இலக்கண மரபுகளோடும் இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. தொல்காப்பியம் குறிப்பிடும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு உள்ளிட்ட வனப்புகள், இலக்கியத்தின் பல்வேறு அழகியல் கூறுகளை வெளிப்படுத்துகின்றன.

காதல், வீரம், நீதி போன்ற அடிப்படைப் பாடுபொருட்களைத் தாண்டி, இலக்கியத்தின் வடிவம், அழகு, கதை அமைப்பு, வருணனை, மொழிநயம் போன்ற கூறுகளுக்கும் தொல்காப்பிய மரபில் இடமுண்டு. இத்தகைய பழந்தமிழ் இலக்கண மரபுகள் பிற்காலத்தில் தனித்தனி இலக்கிய வடிவங்கள் உருவாகுவதற்கான அடித்தளமாக அமைந்திருக்கலாம். எனவே, சிற்றிலக்கியம் என்பது திடீரென ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றிய புதிய இலக்கிய வகை என்று மட்டும் கூற முடியாது. பழந்தமிழ் இலக்கிய மரபில் நிலவிய பல்வேறு இலக்கிய உத்திகளும் அழகியல் கூறுகளும் காலப்போக்கில் தனித்த வடிவங்களைப் பெற்றதன் விளைவாகச் சிற்றிலக்கியங்கள் வளர்ச்சி பெற்றன என்று கருதலாம்.

முடிவுரை

சிற்றிலக்கியம் தமிழின் தனித்துவமான இலக்கிய மரபுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. அளவில் சிறியதாக இருந்தாலும், பாடுபொருள், வடிவம், யாப்பு, உத்தி, மொழிநயம், சமூகப் பதிவு ஆகிய பல்வேறு கூறுகளில் சிற்றிலக்கியங்கள் விரிந்த பரப்பைக் கொண்டுள்ளன. பெருங்காப்பியங்களின் உறுப்புகளாக இருந்த தூது, குறம் போன்ற இலக்கியக் கூறுகள் பிற்காலத்தில் தனித்த இலக்கிய வகைகளாக வளர்ந்ததன் மூலம் சிற்றிலக்கிய மரபு செழுமை பெற்றது.

தமிழகத்தின் அரசியல், சமூக, சமய, பண்பாட்டு மாற்றங்கள் சிற்றிலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்காற்றின. குறிப்பாக நாயக்கர் காலத்தில் பல்வேறு சிற்றிலக்கிய வகைகள் செழித்தன. அருணகிரிநாதர், ஔவையார், காளமேகப்புலவர், குமரகுருபரர், சிவப்பிரகாச சுவாமிகள் போன்ற பல புலவர்கள் இம்மரபை வளப்படுத்தினர். சிற்றிலக்கியங்களின் தனிச்சிறப்பு அவற்றின் பாடுபொருள் பன்மையிலும், பாட்டுடைத் தலைவர்களின் விரிவான தேர்விலும், மக்களின் வாழ்வியலை இலக்கியப் பொருளாக ஏற்றுக்கொண்ட தன்மையிலும் வெளிப்படுகிறது. பாட்டியல் நூல்கள் இவ்விலக்கியங்களுக்கான மரபு மற்றும் விதிகளை வகுத்ததன் மூலம் சிற்றிலக்கியங்கள் கட்டுப்பாடற்ற படைப்புகளல்ல; மாறாக, அவற்றிற்கெனத் தனித்த இலக்கணமும் படைப்பாக்க நெறியும் உள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றன.

சிற்றிலக்கியத்தின் தோற்றம் பிற்காலத்தில் முழுமையான தனிவகை பெற்றிருந்தாலும், அதன் அடிப்படை அழகியல் மற்றும் வடிவியல் கூறுகளுக்கான தொடக்கங்கள் தொல்காப்பிய மரபிலேயே காணப்படுகின்றன. தொல்காப்பியம் குறிப்பிடும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு உள்ளிட்ட வனப்புகள் பிற்காலச் சிற்றிலக்கிய வளர்ச்சிக்கான தொன்மையான இலக்கியப் பின்னணியை உணர்த்துகின்றன. மேலும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருட்களில் ஏதேனும் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு சிற்றிலக்கியங்கள் உருவானாலும், ஒரு சிற்றிலக்கியத்தின் கருத்து மற்றொரு சிற்றிலக்கியத்தில்

இழைந்து வருவதையும் காண முடிகிறது. இவ்வகையான கருத்துத் தொடர்ச்சியும் வடிவப் பன்மையும் சிற்றிலக்கியத்தின் தனித்துவமான சிறப்பியல்புகளாகக் கருதத்தக்கன. ஆகவே, சிற்றிலக்கியம் என்பது தமிழின் மரபையும், மக்களின் வாழ்வியலையும், காலத்தின் மாற்றங்களையும் ஒருங்கிணைத்து வெளிப்படுத்தும் வளமான இலக்கியப் பரப்பாகும்.

அடிக்குறிப்புகள்

1. *சு.சொந்தரபாண்டியன்., தமிழில் கோவை இலக்கியம்., சித்திரா நிலையம், 2006.,(மு.இ)*
2. *மு.பொன்னுசாமி., தமிழ் சிற்றிலக்கிய வரலாறு., இந்து பதிப்பகம், கோவை, 2004, ப.03*
3. *மு.பொன்னுசாமி., தமிழ் சிற்றிலக்கிய வரலாறு., இந்து பதிப்பகம், கோவை., 2004., ப.03*
4. *புலியூர் கேசிகன் (உ.ஆ)., கலிங்கத்துப்பரணி.,பா.எ.427.,பாரி நிலையம்., 2010., ப.207*
5. *மேலது., பா.எ.460., ப.221.*
6. *ஊசல்., வெண்பா பாட்டியல்., பா.எ.45*

References

1. Soundarapandian, S. (2006). Tamilil Kovai Ilakkiyam [Kovai Literature in Tamil]. Chithira Nilayam. First edition.
2. Ponnusamy, M. (2004). Tamil Sitrilakkiya Varalaru [History of Tamil Minor Literature]. Hindu Pathippagam, Coimbatore, p. 3.
3. Ponnusamy, M. (2004). Tamil Sitrilakkiya Varalaru [History of Tamil Minor Literature]. Hindu Pathippagam, Coimbatore, p. 3.
4. Puliyur Kesigan (Ed.). (2010). Kalingathuparani. Pari Nilayam, Verse 427, p. 207.
5. Puliyur Kesigan (Ed.). (2010). Kalingathuparani. Pari Nilayam, Verse 460, p. 221.
6. Venba Pattiyal. Oosal Section, Verse 45.